இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 303 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 30 – வெள்ளிக்கிழமை 13 ஜூன் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 303 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 30 - Friday 13 June 2025 - Madurai 16 Pages ₹ 5.00

# டெல்லியிலிருந்து தமிழ்நாட்டை ஆள முடியாது!

## சேலம் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சேலம், ஜூன் 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 1649.18 கோடி ரூபாய் மதிப்பிலான 225 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 509 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,01,203 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, உரையாற்றுகையில், "டெல்லியிலிருந்து தமிழ்நாட்டை ஆள முடியாது என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக இருப்பது டெல்டா மாவட்டங்கள் என்றால், அதற்கு உயிர்நாடி காவிரி நீர்தான்! அந்தக் காவிரி நீரைத் தேக்கி 16 மாவட்டங்களைச் செழிக்க வைக்கக்கூடிய மேட்டூர் அணையை கடந்த 4 ஆண்டுகளாக குறித்த தேதியில் திறந்து வைத்து விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்த மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சேலம் வந்திருக்கிறேன்.

### காவிரி போல் மகிழ்ச்சி பொங்குகிறது!

அணையிலிருந்து, பொங்கி வரும் காவிரி போல உங்களையெல்லாம் பார்க்கின்ற போது எனக்கு மகிழ்ச்சி பொங்குகிறது.

**இந்த மகிழ்ச்சியை குறிப்பாக உழவர்களுக்கு இன்னும் மகிழ்ச்சியை கூட்டும் வகையில், தொடக்கத்திலேயே ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.**

**விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு இனி 2500 ரூபாய் பெறுவார்கள். அதற்கேற்றாற்போல் சாதாரண ரகத்திற்கு 131 ரூபாய் எனவும், சன்ன ரகத்திற்கு இனி 156 ரூபாய் எனவும், இனி நெல் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்படும். இதனால், சாதாரண ரகம் 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும், சன்ன ரகம் 2 ஆயிரத்து 545 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படும். இதனால், 10 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் பயனடைவார்கள்.**

சேலம் மாவட்டம் சேர்வராயன் மலை கல்வராயன் மலை - ஜருகுமலை - கஞ்சமலை - பச்சமலை - நகரமலை என்று மலைகள் சூழ்ந்திருக்கும் மாவட்டம். இங்கே மலை போல் மக்கள் நலத் திட்டங்களை வழங்குகின்ற இந்த அரசு விழாவில் பங்கேற்று, உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் பெருமை அடைகிறேன்!

இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக, கம்பீரமாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் அவர்கள்!

மாணவராக அரசியலில் நுழைந்து, 1983 ஆம் ஆண்டு இளைஞரணி காலத்திலிருந்து இப்போது வரை என்னோடு பயணித்துக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற அவரைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், "சேலத்து மாங்கனியைப் போல இனிமை யானவர்! சேலம் இரும்பைப் போல உறுதியானவர்!" அவர் அமைச்சரான பிறகு நடத்துகின்ற முதல் அரசு விழா! ஃபர்ஸ்ட் என்று சொல்வதை விட, ஃபர்ஸ்ட்கிளாஸ் என்று சொல்லுகின்ற அளவுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்! அதேபோல, அவரது துறையையும், சேலத்தையும் அவர் வளர்த்தெடுப்பார்!

### சிறப்பாகப் பணியாற்றும் ஆட்சியர்களில் ஒருவர் பிருந்தா தேவி!

அதேபோல, சேலத்தின் வளர்ச்சிக்கு இன்றைக்கு அயராது உழைப்பவர்தான் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தாதேவி அவர்கள். நான் பெருமையோடு சொல்கிறேன் தமிழ்நாட்டிலேயே சிறப்பாக பணியாற்றக் கூடிய கலெக்டர்களில் ஒருவராக பிருந்தாதேவி அவர்கள் இருக்கிறார். அவருக்கு துணைநிற்கும் இந்த மாவட்டத்தின் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

**சேலம் மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**முதலாவது அறிவிப்பு சேலம் மாநகராட்சி பகுதிகளில், 100 கோடி ரூபாய் செலவில் சாலைகள் மேம்பாடு, போதிய கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**இரண்டாவது அறிவிப்பு சேலம் மாநகராட்சி செவ்வாய்ப்பேட்டையில் இருக்கும் தினசரி சந்தை 9 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

**மூன்றாவது அறிவிப்பு தலைவாசல் வட்டத்தில் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் இலுப்பநத்தம் கிராமத்தில் இருக்கும் வேளாண் விற்பனை நிலையம் 10 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.**

**நான்காவது அறிவிப்பு மேட்டூர் மற்றும் நரசிங்கபுரத்தில் புதிய நகராட்சி அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், சேலத்தில் 880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டடம் உள்ளிட்ட 1,244 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 509 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 200 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் 225 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார். இந்த விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, மலையரசன், ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சதாசிவம், இரா. அருள், சேலம் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி. சாரதா தேவி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் இராஜேந்திரன்

### சேலத்து மாங்கனியைப் போல இனிமையானவர்!

### சேலம் இரும்பைப்போல உறுதியானவர்!



**இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக, கம்பீரமாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் அவர்கள்!**

**மாணவராக அரசியலில் நுழைந்து, 1983ஆம் ஆண்டு இளைஞரணி காலத்திலிருந்து இப்போது வரை என்னோடு பயணித்துக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற அவரைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், "சேலத்து மாங்கனியைப் போல இனிமையானவர்! சேலம் இரும்பைப் போல உறுதியானவர்!" அவர் அமைச்சரான பிறகு நடத்துகின்ற முதல் அரசு விழா! ஃபர்ஸ்ட் என்று சொல்வதைவிட, ஃபர்ஸ்ட்கிளாஸ் என்று சொல்லுகின்ற அளவுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்! அதேபோல, அவரது துறையையும், சேலத்தையும் அவர் வளர்த்தெடுப்பார்!**

## மேட்டூர் அணையிலிருந்து 2025 - 2026ஆம் ஆண்டிற்கான

# காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சேலம், ஜூன் 13-**

**மேட்டூர் அணையிலிருந்து 2025 - 2026 ஆண்டிற்கான காவிரி டெல்டா பாசனத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.**

இன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 114.910 அடியாகவும் நீர் இருப்பு 85.583 டி.எம்.சி. ஆக உள்ளது.

### குறுவைப் பாசனம்

காவிரி டெல்டா குறுவை பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15ஆம் தேதி வரை 5,22,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 138.52 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடகா அணைகளிலிருந்து மாதந்தோரும் விடுவிக்கப்படும் நீரினை கருத்தில் கொண்டும் மேட்டூர் அணையில் இருந்து 125.68 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும், மீதமுள்ள 12.84 டி.எம்.சி தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகவும் பூர்த்தி செய்யப்படும்.

குறுவை பாசனம் நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, ஆகிய மாவட்டங்களில் 4,91,200 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 118.17 டி.எம்.சி தண்ணீரும், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கு 30,800 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 7.51 டி.எம்.சி தண்ணீரும் மேட்டூர் அணையிலிருந்து தேவைப்படுகிறது.

தற்போது மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு இன்று காலை வினாடிக்கு 3000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு, இன்று மாலைக்குள் படிப்படியாக வினாடிக்கு 10,000 கனஅடியாக உயர்த்தப்படும். மேலும், குறுவை சாகுபடி தேவைக்கேற்ப இந்த அளவு உயர்த்தி வழங்கப்படும்.

### சம்பா மற்றும் தாளடி பாசனம்

மேட்டூர் அணையிலிருந்து சம்பா மற்றும் தாளடி பாசனத்திற்கு, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 12,10,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 268.47 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படும். இதற்கு அணையிலிருந்து தண்ணீர் வழங்கியும், மீதமுள்ள தண்ணீர் வடகிழக்கு பருவ மழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும். மேட்டூர் அணையின் கீழ் பகுதியில் ஆற்றில் இருந்து சுமார் 155 குடிநீர் திட்டங்களின் மூலம் தினசரி 1707.63 மில்லியன் லிட்டர் தண்ணீர் 18 மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து வைத்து மலர்தூவினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இரா. ராஜேந்திரன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம். செல்வகணபதி, மலையரசன், ஆ. மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், சேலம் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், துணை மேயர் திருமதி. சாரதா தேவி, நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச. ரமேஷ், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் ஆர். தயாளகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.